

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## "ஓசன்னா!" ஆர்ப்பரிப்பின் இரகசியம்!

"முன் நடப்பாரும் பின் நடப்பாரும்: ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்" என ஜனங்கள் ஆர்ப்பரித்ததை மாற்கு11:9 கூறுகிறது! இவ்வாறு தங்கள் 'ராஜாவை' என்றென்றும் ஸ்தோத்தரித்து மகிழச்செய்தவர்கள் வெகு சிலரே! ஏனெனில், தங்கள் ஜீவியத்தின், பல்வேறு இன்னல்களாகிய **'முன் நடந்த' பகுதிகளில்** தேவனிடம் சோர்வும் முறுமுறுப்பும் கொண்டவர்கள், திடீரென்று **'பின் நடப்பவைகளுக்காக'** ஓசன்னா! என தங்கள் கர்த்தரின் ஆளுகையை விசுவாசித்து ஸ்தோத்தரிப்பது கடினமானதும்.... போலியுமானதேயாகும்!

"அவர் என்னை ஆளும் கர்த்தர்! ராஜா! என்றென்றும் ஆளும் சர்வ வல்லவர்!" என தங்கள் வாழ்வின் 'முன் நடந்த'வைகளுக்கு முறுமுறுப்பு ஏதுமில்லாது, அவரது ஆளுகையை ஏற்று மகிழ்ந்தவர்களே 'பின்நடக்கும்' அனைத்து வாழ்வின் அல்லது ஊழியத்தின் பகுதிகளுக்கும் வெற்றி முழக்கமான 'ஓசன்னா!' என ஆர்ப்பரித்து தங்கள் ராஜாவில் மகிழ்ந்திடும் பாக்கியம் பெற்றவர்கள்! (வசனம்.10).

-tr

பெட்டகம் 19 மே 2017 பரல்கள் 5



# அன்பின் ஜீவியம், சூரிய ஓட்டத்தின் அனலாகட்டும்!

அன்பின் பயணமே நம் வாழ்வின் பயணத்தில் 'சவால் நிறைந்த' பயணமாகும்! கணவன் – மனைவி அன்பு.... சகோதரர்களிடம் கொண்ட அன்பு.... தாய் – தந்தையிரிடம் கொண்ட அன்பு.... ஆகிய இந்த பயணத்தில், இறுதிவரை தங்கள் அன்பில் நாளுக்குநாள் பெலன் கொண்டு வளர்பவர்கள் வெகு குறைவு! வேறு அனைத்து வாழ்வின் பகுதிகளிலும் ஓங்கி வளர விரும்பும் மானிடர்கள், இந்த நித்தியமான அன்பின் பயணத்தில் போகப் போக அனல் குன்றி குறைவது, அன்பின் ஜீவியத்திற்கு ஏற்படும் பெரும் தோல்வியே ஆகும்!

'அன்பின் ஒளி சிந்தி' பயணிக்கும், மகிழ்ச்சி நிறைந்த வெற்றிப் பயணத்தை, நம் கண்கள் நாள்தோறும் காணும்படியே தேவன் செய்துள்ளார்! தினசரி தன் அன்பின் காந்தியை சுடரிட்டு எழும் சூரியனை சற்று அண்ணாந்து பாருங்கள்! மானிடரைப் போல் காலம் செல்லச் செல்ல தன் அன்பின் காந்தியில் குளிர்ந்துபோன கதி, இந்த சூரிய வெப்பத்தின் பயணத்தில் இல்லை! மாறாக, காலை 6மணிக்கு மென்மையான காந்தியுடன் உதித்த சூரியன்.... 8மணிக்கு சற்று அதிக வெப்பம்.... 10 மணிக்கு இன்னும் அதிக வெப்பம் என.... தொடர்ந்து மத்திய உச்சியை ஜொலிக்கும் காந்தியுடன் அடைகிறதே, அதுவே நம் அன்பின் பயணமாய் நாள்தோறும் இருப்பதாக! மேலும், ஒரு முனை துவங்கி மறுமுனைவரை ஓடும் இதன் ஓட்டம், முடிவுவரை நிலைத்திருக்கும் அன்பின் ஓட்டம்!! இவர்களையே 'பராக்கிரமசாலிகள்' என்றும் 'மகிழ்ச்சி நிறைந்தவர்கள்' என்றும் வேதம் சங்கீதம்.19:5,6 வசனங்களில் கூறி மகிழ்வதைப் பாருங்கள்!! மாத்திரமல்ல, அதன் சூரிய – காந்திக்கு.... அந்த அன்பின் வெப்பத்திற்கு "மறைவானது ஒன்றுமில்லை!" என ஆர்ப்பரிக்கும் தெய்வீக கிறிஸ்துவின் அன்பே என்றும் நமதாகுக! (வசனம்.6). ஆம், நல்லவர்கள் கெட்டவர்கள் என்றோ, பகைத்தவர்கள் காட்டிக்கொடுத்தவர்கள் என்றோ.... ஒருவர் பாக்கியில்லாமல், அனைவருக்கும் தன் காந்தியான அன்பின் வெப்பத்தை 'சுடர் கதிராய்' பரவச் செய்திடும் இவர்களே, தேவ குமாரர்கள் என இயேசு பெருமிதம் கொண்டார்! (மத்தேயு.5:45).

*-Ed*


**பரலோக பொக்கிஷங்கள்**

வருடசந்தா **ரூ.120.00** ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.100.00

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
**Savings a/c no: 502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

ஆவிக்குரிய விழிப்பூட்டும் ! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306, (H) 0452 - 2661177
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, cfcindia.com/tamil

## சபையின் தூய்மை காத்திட, சபையார் அனைவருக்கும் பொறுப்புண்டு!

இன்று அனேக ஜனங்கள் ஆவிக்குரியவர்களாய் இல்லாமல், வெறும் மார்க்க பக்தி கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். இவ்வித மார்க்க பக்திகொண்டவர்களிடம், வேத வாசிப்பும், ஜெபமும், கூட்டங்களுக்குச் செல்வதும், பலவித ஊழிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதும்...... போன்றவைகள் மட்டுமே காணப்படும்! ஆனால், உண்மையான ஆவிக்குரிய தன்மையோ, **தேவனுடைய திவ்விய ஜீவனில்** பங்குபெறுவதேயாகும்! இவ்வித ஜீவியமே நம்மை பரிசுத்தர்களாய் மாற்றுகிறது. இந்த ஜீவன் நம்மில் இல்லையென்றால், நாம் வெறும் மார்க்கவாதிகளாகவே முற்றுப்பெறுவோம். ஆகவே நாம் வெறும் மார்க்கவாதிகளா? அல்லது உண்மையான ஆவிக்குரியவர்களா? என நம்மை நாமே தொடர்ச்சியாக சோதித்து அறிவது மிகவும் நல்லது.

உதாரணமாய், நம்மைச் சோதித்தறிய வேண்டிய எத்தனையோ பகுதிகளில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் உங்களைக் கீழ்காணும் விதமாய் சோதித்துப் பாருங்கள். நம்மில் திருமணமானவர்களில் எத்தனைபேர் நேர்மையுள்ள மனதோடு, "ஆண்டவரே! என் கணவன் அல்லது மனைவிக்குத் தவிர வேறு யாருக்கும் என் சரீரத்தின் எந்த ஒரு பகுதியிலும் கவர்ச்சி உள்ளவனாய் காணப்படாதிருக்க எனக்கு உதவி செய்யும்!" என ஜெபித்திருக்கிறோம்? இந்த ஜெபம், தன் அந்தரங்கத்தில் மாசற்ற பரிசுத்தத்தை வாஞ்சிக்கும் எந்த ஒரு கிறிஸ்தவ சகோதரனின் சகோதரியின் உள்ளத்தில் காணப்படும் ஓர் குமுறலான ஜெபமாயிருக்கும்!

> இதற்கு மாறாக, திருமணமான ஒரு கிறிஸ்தவ கணவன் அல்லது மனைவி, வெளியிலுள்ள எதிர்பாலருக்குத் தங்களைக் கவர்ச்சி உள்ளவர்களாய் காண்பிக்க நாடுவது வெட்கத்திற்குரிய செயலாகும்!

இதுபோன்ற சகோதரர்களோ அல்லது சகோதரிகளோ நம் மத்தியில் வந்து அமர்ந்தால்..... நம்முடைய கூட்டங்கள் அவர்களுக்குள் ஒருவித அசௌகரியத்தையும் கலக்கத்தையும் தருவதாயிருக்க வேண்டும்!

சபையின் தூய்மையை காப்பதில் நாம் எல்லோருமே மிகுந்த கவனம் கொண்டிருக்க வேண்டும். சகோதரர்களே, நீங்கள் சபையில்

உள்ள ஒரு சகோதரியிடம் "தவளையின் ஆவிக்கு" ஒப்பான அசுத்தமான ஆவியைக் கண்டால் (வெளிப்படுத்தின விசேஷம் **16:13** ம் வசனத்தை யாத்திராகமம் **8:3-6** வசனங்களோடு ஒப்பிட்டு வாசியுங்கள்) அந்த சகோதரியினிமித்தம் எச்சரிக்கையாயிருங்கள்! கொள்ளை நோய்க்கு விலகி ஓடுவதுபோல் இந்த சகோதரியைத் தவிர்த்து தூர நில்லுங்கள்! நீங்கள் அப்படிச்செய்யவில்லையென்றால் உங்களை நீங்களே அழித்துக் கொள்வீர்கள்! இதற்கொப்பாக......

**சகோதரிகளே, நீங்கள் யாராகிலும் ஒரு மனுஷன் அல்லது சபையில் தன்னை சகோதரன் என அழைத்துக்கொள்ளும் ஒருவரின் கண்களில் "தவளையைக்" கண்டால், எப்பாடுபட்டாவது அந்த சகோதரனைத் தவிர்த்து தூர நில்லுங்கள்.**

இவ்வாறெல்லாம் நீங்கள் கவனம் கொண்டிருக்காவிடில், உங்களைப் பரிசுத்தமாய் காத்துக்கொள்வது ஒருக்காலும் முடியாது.

இவ்வாறாக நம்முடைய சபையானது "அசுத்தத்திலிருந்து" முற்றிலும் விடுதலையாகி "**பரலோக சூழலைக்**" கொண்டதாய் எந்நாளும் திகழவேண்டும். சபையில் எந்த அளவு நாம் பரலோகத்தின் ஜீவனைக் கொண்டுவருகிறோமோ அந்த அளவிற்குத்தான் நாம் **சபைக்கு உபயோகமானவர்கள்** என்பதைக் கணக்கிடவும் முடியும்.

ஒரு சகோதரன் அல்லது சகோதரி சபைக் கூட்டத்திற்கு வரும்போதெல்லாம், ஓர் தூய்மையான தென்றல் பரலோகத்திலிருந்து சபையின் அறை முழுவதும் நிரப்புவதைப் போல் நாம் உணர்ந்தால், அந்த சகோதரன் அல்லது சகோதரி எவ்வளவு விலையேறப் பெற்றவர்கள்! இது போன்றவர்கள், போகிறபோக்கில் உங்களிடம் ஐந்து நிமிடம் நின்று பேசினாலும், நீங்கள் புத்துணர்ச்சியடைவீர்கள்! ஆம், உங்கள் வீட்டிற்கு பரலோகம் ஐந்து நிமிடம் வந்து சென்றதைப் போல் உணருவீர்கள். அவர்கள் ஒன்றும் பெரிய பிரசங்கத்தை செய்து விடவில்லை! ஆனால், அவர்களோ பிரகாசிக்கும் தூய்மை கொண்டிருந்தார்கள்..... முகவாடல் அற்றிருந்தார்கள்..... ஒருவரையும் குறைசொல்லாதிருந்தார்கள்! இதுபோன்ற சகோதர சகோதரிகள், (இன்று அனேகர் இச்சை கொண்டிருப்பதுபோல்) சபையில் "முதலாவதாக" ஒரு சமயம்கூட பேசியிருக்க மாட்டார்கள். ஒவ்வொரு கூட்டத்திலும் இவர்கள் சுமார் பதினைந்தாவது ஆளாய் எழுந்து வந்து..... மூன்று நிமிடம்தான் பேசியிருப்பார்கள். ஆனால், அந்த மூன்று நிமிடம் தான் கூட்டத்தில் பரலோகம் வந்ததுபோல் இருந்திருக்கும்!! இந்த மூன்று நிமிட பரலோக ருசிக்காகக் "காத்திருந்து" அவர்கள் பேசுவதைக் கேட்பது தகும் என்றே நாமும் எண்ணுவோம்!!

*நாம் வாழும் இந்த உலகத்தில் எங்கு பார்த்தாலும் முறுமுறுத்து குறைசொல்லுபவர்களே நம்மைச் சூழ்ந்திருக்கிறார்கள். இதுபோன்ற உலகில் மேற்கண்ட "இனிமையான தென்றலைப் போல்" முறுமுறுப்பற்ற சகோதர அல்லது சகோதரிகளைச் சந்திப்பது நமக்குப் புத்துணர்ச்சியை ஊட்டுவதாயிருக்கிறது. இன்னமும் சொல்ல வேண்டுமென்றால், கோடை வெயிலின் 'பிசுபிசுப்பிலிருக்கும்' ஒருவன் குளிர்ந்த நீரில் ஸ்நானம் பண்ணுவதைப் போலவே அவர்களின் ஐக்கியம் இருக்கும்! இத்தகைய சகோதர சகோதரிகளுக்கு ஒப்பாய் மாறும்படிக்கே நாமனைவரும் நாட வேண்டும்! இதுபோல்தான் இயேசு இருந்தார்...... ஆகவே, நம்மையும் அவரைப்போல் மாற்றிட விரும்புகிறார்!!*

**இதுபோன்ற 'இனிய தென்றலாய்' இருப்பதற்குப் பதிலாய் இன்று அனேக சகோதர சகோதரிகள் எங்கெல்லாம் செல்கிறார்களோ, அங்கெல்லாம் பிரச்சனை உண்டுபண்ணுகிறவர்களாகவே இருக்கிறார்கள்!**

*இவர்களின் புறங்கூறுதல் மூலமாய், சகோதர சகோதரிகளின் ஐக்கியத்தைப் பிரித்து விடுகிறார்கள். இப்படிப்பட்டவர்களை "**சாத்தானின் கைக்கூலிகள்**" என சொல்வதை விட, வேறு எங்ஙனம் நாம் கூற முடியும்?*

*பிதா, குமாரன், பரிசுத்த ஆவி இம்மூவரும் சேர்ந்து வாழ்ந்தது போலவே நாமும் **ஒருவரோடொருவர் ஐக்கியமாய்** வாழ்வதற்கென்றே அழைக்கப்பட்டிருக்கிறோம். திரித்துவமான மூவருமே, ஆதி முதலாய் வாழ்ந்த நித்தியத்தில், ஒருவருக்கொருவர் பிரசங்கித்துக் கொண்டிருக்கவில்லை..... மாறாக, அவர்களிடம் ஐக்கியமே நிலவியது. இன்று நாமும் அதைப்போலவே, ஒருவருக்கொருவர் பிரசங்கிக்கும்படி அழைக்கப் படாமல் பிதாவாகிய தேவனோடு ஐக்கியம் கொள்வதற்கே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்!*

*– சகரியா பூணன்*

---

## என் நெருக்கத்தில் கர்த்தரே, பூரண இளைப்பாறுதல் தந்தார்!

*என் அம்மை நோயிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக பழைய சுகமான நிலைமைக்குத் திரும்பினேன். என் கணவரும் சுகமடைந்து வந்தார். என் கணவருக்கு உண்மையாய் இருந்து, அவருக்கு பணிவிடை செய்யத் தொடங்கினேன். ஆனால் மீண்டுமாய், என் கணவரை காண வந்த அவரது நண்பர்களும் உறவினர்களும் என்னைக் குறித்து பல்வேறு அபிப்பிராயங்களை தீமையாய் அவரிடம் கூறத் துவங்கி விட்டார்கள். என் கணவரும் அவைகளை கேட்கத் தொடங்கி விட்டார் என்பது எனக்கு மிக வருத்தமாய் இருந்தது. "ஓ என் தேவனே,*

என் நிமித்தம் நீர் ஒருவர் மாத்திரமே மாறாத நல்லெண்ணம் வைத்திருக்கிறீர், அதுபோதும்....

வெளிப்பிரகாரமாய் எனது சிலுவையினுடைய கொடுமைகள் எவ்வளவு இருந்தாலும், நீரோ அவைகளை இரட்டிப்பான கிருபைகளாய் மாற்றி என் உள்ளத்தில் தங்க வைக்கிறீர். உமது அற்புத செயலுக்கு நன்றி'' என ஆண்டவரைப் போற்றினேன்!

இதே நேரத்தில், நான் முழு சுகமடைந்ததைக் கண்ட என் வேலைக்கார பெண்மணி என்மீது கொண்ட வெறுப்பின் ஆக்ரோஷத்தை இன்னமும் அதிகரித்துக் கொண்டாள். நான் **கர்த்தருடைய மேஜைக்கு** தெய்வ பயத்துடன் அதிக கனம் தருவதை அவள் அறிவாள். ஆகவே அவளுடைய கொடுமையான வார்த்தைகள் எனக்கு யாதொரு தீமையையும் செய்ய முடியவில்லை என்பதை அறிந்தவளாய், அன்று வரை கர்த்தருடைய அப்பத்தை புசிக்க செல்லாதவள், இப்போது 'எனக்கு மனநோவு உண்டாவதற்காகவே' கர்த்தருடைய மேஜைக்கு தினமும் சென்றாள். என் வேலைக்கார பெண்மணி போட்ட கணக்கு சரிதான்.... கர்த்தருடைய மேஜைக்கு களங்கம் ஏற்பட்டதே என நானும் உள்ளம் பதைத்தேன். "ஓ என் மணவாளனே, தூய்மையுள்ள ஆத்துமாவிற்கு நாயகரே, உம்முடைய மேஜைக்கு பயன்படும் பாத்திரங்களை சிறந்த வெள்ளி ஆபரணங்களால் மனப்பூர்வமாய் தந்து அலங்கரித்தேன், அந்த தூய்மைக்கு என் வேலைக்கார பெண்ணின் பங்கிலிருந்து அசுசிபட்டதோ என கலங்குகிறேன்'' என்றே ஜெபித்தேன். கர்த்தருடைய பந்தியின் பரிசுத்த பாத்திரங்களுக்கும், ரசம் வழங்கும் கப்புகளுக்கும் நான் அதிகம் மதிப்பு கொடுப்பதை அறிந்து செயல்பட்ட அவள், அதினிமித்தம் நான் வேதனையால் வாடுவதை அறிந்து, மிகவும் சந்தோஷம் அடைந்தாள்.

ஒருநாளில் முழுநேரமும் என்னை துன்பப்படுத்துவதில், அப்படி ஒரு மகிழ்ச்சியை என்னுடைய வேலைக்கார பெண்மணியும் என் மாமியாரும் அடைந்தார்கள்.

அவர்கள் செய்த தீமைக்கு 'அப்படி இல்லை' என நான் கூறிய ஒரு வார்த்தை பெரிய கலவரத்தையே வீட்டில் உண்டாக்கி விட்டார்கள்!

அவர்களின் அனைத்து குற்றசாட்டுகளுக்கும் நான் அமைதியாய் இருந்தால், அதுவும் அவர்களின் ஆத்திரத்தை அதிகமாய் தூண்டி விட்டது!

அன்று திடீரென்று, என் மாமியார் "இங்கே பார், கர்த்தருடைய மேஜைக்கு பொறுப்பான பாதிரியிடம், நீ கெட்டவள்! கர்த்தருடைய மேஜைக்கு தகுதியற்றவள்! இவளை கர்த்தருடைய மேஜைக்கு

அனுமதிக்காதீர்கள்!" என எழுதப் போகிறேன் என கூறினார்கள். அதற்கு நான், எந்த பதிலும் கூறாமல் நின்றேன்! அதுவும் அவர்களுக்குப் பிடிக்காமல், நான் அவர்களை அவமதித்து துன்புறுத்துவதாக பெரிதளவில் கோபப்பட்டு சத்தமிட்டார்கள்.

என் வேலையெல்லாம் ஒழுங்கு செய்து முடித்த பிறகு, தனியே ஜெபிக்கும்படி என் அறைக்கு சென்றதும், என் வேலைக்கார பெண்மணி என் கணவரிடம் ஓடோடிச் சென்று "பாருங்கள் உங்கள் மனைவி ஒரு வேலையும் செய்யாமல் எல்லாவற்றையும் அப்படியே போட்டுவிட்டு தன்னுடைய அறைக்கு செல்கிறார்கள்!" என கோபத்தோடு புகார் செய்தாள்.

சிறிது ஓய்வுக்குப் பின்பு நான் மெயின் ஹாலுக்கு திரும்பியதும், என் கணவர் கொடிய வார்த்தைகளை கோபத்தோடு பேசி, என்னை அடித்து துன்புறுத்தவும் செய்தார். நானோ உண்மையான காரணங்களை எடுத்துக் கூறினேன்.... அதற்கு அவர் 'அத்தனையும் பொய்' என சாடிவிட்டார். அந்த கோப நேரத்தில் என் மாமியார் குறுக்கிட்டு, "இவளால் நமக்கு எல்லாமே நஷ்டம்தான்! மகனே, நான் உன்னை பாதுகாக்கவில்லையென்றால், நீ அழிந்தே போயிருந் திருப்பாய்" என பரிவோடு என் கணவரிடம் பேசி, அவரது ஆத்திரத்தை இன்னமும் தூண்டிவிட்டார்கள்.

**கூறப்பட்ட அனைத்தையும் என் கணவர் அப்படியே நம்பினார்.** நான் செய்ய அறிந்ததெல்லாம், முழுமையான பொறுமையோடு, அனைத்தையும் சகித்துக் கொண்டு, என் கடமையை அன்போடு நிறைவேற்றுவதே ஆகும்!

இத்தனை எதிர்ப்பான இவர்களிடம் நான் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தேன். ஏனென்றால், நான் எதையாகிலும் என் மாமியாரிடம் கேட்காமல் ஆர்டர் செய்தால் "நீ உன் இஷ்டபடி செய்கிறாய் என்னை நீ மதிப்பதில்லை!" என கூறினார்கள். ஆகவே, "என்ன வாங்க வேண்டும்? எவ்வாறு செய்ய வேண்டும்?" என நான் அவர்களிடம் கேட்டால், "எல்லா பிரச்சனைகளையும் என்மீது போடலாம் என எண்ணுகிறாயோ?" என சத்தம் போட்டார்கள். நானோ, ஓய்வே இல்லாமல், தொடர்ந்து வேலை செய்து கொண்டே இருந்தேன்! ஆகிலும், சூழ்நிலை எவ்வளவு கொடுமையாய் இருந்தாலும் "ஓ என் தேவனே, எனக்கோ உம் சித்தம் ஒன்றையே அதிகமாய் நேசிக்கிறேன். **நீர் நடத்தும் பாதை அனைத்திற்கும் மகிழ்வுடன் என்னை சமர்ப்பிக்கிறேன்.** உம்மிலே நான் காணும் இளைப்பாறுதல், வெளியில் இந்த உலகம் தரும் இளைப்பாறுதலுக்கு ஒப்பானதல்ல" என ஜெபித்து அமைதி பெற்றேன்.

– மேடம் குயான்

## ஜெபத்தில் தீவிரமாய் முன்னேறும் சபை வேண்டும்!

**சு**விசேஷ அனல் கொண்டு பிரசங்கித்த ஜான்வெஸ்லிக்கு எதிர்ப்பு தெரிவித்து, ஆங்கில சபைகள் அனைத்தும் அவருக்கு தங்கள் வாசல் கதவுகளை மூடிவிட்டார்கள். அந்நாட்களில் பிரபல்யமாயிருந்த ஸ்தாபன தலைவர் **ரோலண்ட் ஹில்** வெஸ்லி குழுவினரை, பரிகசித்து "வெஸ்லியும் அவரைச் சுற்றி நிற்கும் கூத்தாடிகளும், நாகரீக அறிவில்லாத பிரசங்கிகளும், தெருக்கூட்டும் தோட்டி கும்பல்களுமாய் வேதாகமத்தை தூக்கி வரும் இவர்கள், மனுஷர்களை மதிகேடாக்க பிரசங்கிக்கிறார்கள்" என கேவலமாய் விமர்சித்தார்! இவர் பொறுக்கி எடுத்துப் பேசிய இழிவான வார்த்தைகளைப் பாருங்கள். ஆனால் ஜான்வெஸ்லியோ யாதொரு மனுஷனுக்கும் அஞ்சவில்லை! எந்த பிசாசின் கூட்டங்களுக்கும் அஞ்சவில்லை! அன்று, பரிசுத்தவான் **ஒயிட்பீல்டு** ஆங்கில பிரசங்க மேடையில் கீழ்த்தரமாய் தாக்கப்பட்ட போது, அவரும் வாய் திறக்கவில்லை! புதிய ஏற்பாட்டில் வரும் எல்லா கிறிஸ்தவ பிரசங்கிகளுமே கல்லெறியப் பட்டு பல்வேறு அவமானத்திற்கு தள்ளப்பட்டார்கள்! இன்றும், அன்றிருந்த அதே பாவங்களும் பாவிகளும்தான் தேசத்தை ஆட் கொண்டிருக்க.... இந்த பிரசங்கிகளின் செய்திகள் நரகத்தின் கோபத்தை ஏன் எழுப்ப முடியவில்லை? ஆராதனைகளும் பிரசங்கங்களும் ஒழுங்கும் கிரகமுமாய் நடந்து என்ன பிரயோஜனம், அங்கு அனல் காணப்படவில்லையே! கிறிஸ்தவ குழுக்கள் பகட்டாய் பவனி வருகிறார்கள். அங்கோ, உயிரற்ற எலும்பு கூடுகள்தான் எஞ்சி நிற்கின்றன!

**கிறிஸ்து விரும்பும் எழுப்புதல் இல்லாமலே கிறிஸ்தவ சபைக்கு விரோதமான கலகங்கள் வரலாம்! ஆனால் முழுவேதாகமத்திலும், சபை சரித்திரத்திலும், சபைக்கு விரோதமான கலகங்கள் பொங்கி எழாமல், எழுப்புதல் ஏற்பட்டதே இல்லை! அனல் கொண்ட சபைகளே கிறிஸ்துவுக்கு விரோதமான எந்த கலகங்களுக்கும் மடிந்துபோனதில்லை!**

உங்களைச் சுற்றியுள்ள கிறிஸ்தவர்களையும் கிறிஸ்தவ சபைகளையும் பாருங்கள். "ஜெபம்" அவர்களுக்கு ஓர் அவசர தேவையாய் புலப்படவில்லை. ஒருசமயம், புகழ்பெற்ற ஒரு பிரசங்கி ஜெப மாநாட்டை துவக்கி வைத்துப் பேசுகையில் "இந்த மாநாட்டிற்கு சொல்லி முடியாத ஜெப வாஞ்சையுடன் நான் வந்துள்ளேன். நான் பெற்றிருக்கும் அதே பாரத்தை என்னோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறவர்கள், எந்த மாயமாலமும் இல்லாமல் உங்கள் கரங்களை உயர்த்தி காண்பியுங்கள் என அழைப்பு விடுத்தார்!" ஜெப

மாநாட்டிற்கு வந்த அநேகர் தங்கள் கரங்களை உயர்த்தினர். ஆனால் அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சி பெரும் சோகத்தையும் துக்கத்தையும் தந்தது. அந்த வாரத்தின் இறுதியில், இரவு ஜெப நேரத்தில் இந்த புகழ்பெற்ற பிரசங்கி 'நான் தூங்கப் போகிறேன்' எனக் கூறி படுக்கைக்கு சென்றுவிட்டார். இது மாயமாலத்தின் உச்சகட்டமல்லவா! **நேர்மையை காற்றில் பறக்க விட்டுவிட்டு வெற்று வாய் - பேச்சுகளால் என்ன பிரயோஜனம்?** பரிசுத்தாவியின் மிகப்பெரிய எழுப்புதலுக்கு தாமதம் ஏன் தெரியுமா? அழிவின் பாதையில் செல்லும் மாந்தர்கள் மீதுகொண்ட 'ஆத்தும பாரம்' இன்றுள்ள கிறிஸ்தவர்களிடம் மங்கிய காரணமேயாகும். இன்று மேடைகளில் கிறிஸ்துவை பிரஸ்தாபப்படுத்துவதற்கு பதிலாக, தங்களைக் குறித்தே அதிகமாய் பிரச்சாரம் செய்கிறார்கள். இது, கிறிஸ்துவின் நாமத்திற்கு விளைந்த துரோகம் அல்லவா? புதிய ஏற்பாடு எலியாவைக் குறித்த விலைமதியாத பின் - குறிப்பை நமக்கு வழங்கியிருக்கிறது. யாக்கோபு.5:17 - ல் காணும் அவனை பற்றிய பின் குறிப்பு "**எலியா ஜெபம் பண்ணினான்!**" என்ற அழகான ஒரே வாக்கியமே ஆகும்! ஆனால் பழைய ஏற்பாட்டில் எலியாவைப் பற்றி பலமுறை வாசித்தவர்கள், இந்த அருமையான 'எலியா ஜெபித்தான்' என்ற வாசகத்தை தள்ளிவிட்டு, எலியா தீர்க்கதரிசனம் உரைத்தான் என்றே பெரிதாய் பேசி ஆர்ப்பரிக்கிறார்கள்!

நாம் 'இரத்தம் சிந்தும் அளவிற்கு' ஜெப வாழ்வில் போராடவில்லை. மார்ட்டின் லூத்தர் உரைத்ததுபோல் 'நம்முடைய ஆத்துமாவில் வியர்வை கூட காணப்படவில்லை!' இன்றுள்ள ஜெப ஜீவியம் "ஜெபித்தாலும் சரி, ஜெபிக்காவிட்டாலும் சரிதான்" என்ற மனப்பான்மையே உலாவுகிறது. ஜெபத்தில் பதில் கிடைத்தால் நல்லதுதானே.... என்ற உறுதியற்ற ஜெபமே, கிறிஸ்தவர்களை ஆட்கொண்டுவிட்டது. 'கிரயம் செலுத்தாமலே' ஜெபத்திற்கு முழங்கால் படியிட முயற்சிக்கிறார்கள்! ஜெபத்திற்கு 'பலமான விருப்பமும்' இல்லாமல் போய்விட்டது. ஜெபத்திற்கு ஆயத்தமான தகுதியோ, அசதியில்லாத உற்சாகமோ, இடைவிடாத ஜெப ஆவியோ.... இல்லாமல், நாம் ஜெபிக்கச் செல்வது கொடுமை!

ஜெபம் ஒன்றிற்கு மாத்திரமே, தனது வல்லமையை தேவன் கரம் விரித்து வழங்குகிறார். ஜெபத்தின் வல்லமையை எழுதிக்காட்டுவோர் அநேகர். ஆனால், ஜெபத்தில் நின்று போராடியவர்கள் வெகுசிலர்!

போராட வேண்டிய கிறிஸ்தவன் இன்று தலைகீழாய் மாறி "நாங்களோ போராடுவதில்லை! அதற்கு பதிலாக, உலகப்பிரகாரமான வரங்களோ அல்லது ஆவிக்குரிய வரங்களோ அதை வர்ணித்துக்

*காட்ட நாங்கள் ஆயத்தம்! உபதேச திருத்தத்திற்கு விடை வேண்டுமா.... அதற்கு ஒரு பிரசங்கம் செய்ய தயார்! அல்லது வழி விலகிப் போகும் அந்த சகோதரனை வைத்தே உபதேச கூட்டம் நடத்தவும் தயார்! இப்படியெல்லாம் பேசித் திரியும் கூட்டத்தின் மத்தியில் ஜெப வலிமையோடு நரகத்தின் வாசலை தகர்க்க துணிபவர்கள் எத்தனை பேர்? கொடும் பிசாசின் கோஷ்டங்களுக்கு 'மறுப்பு கூற முனைபவர்கள்' எத்தனைபேர்?* **உணவை புறக்கணித்து உபவாசிக்க முன் நிற்பவர் உண்டோ?** *சொந்த பந்தங்களோடு கொண்ட இனிய நேரத்தை தேவனுக்கென தள்ளி வைத்தவர்கள் எத்தனை பேர்? அல்லது தங்களது இனிய இளைப்பாறும் நித்திரையை தேவனுக்காக புறக்கணித்தவர்கள் உண்டோ? இவர்களையே போராடும் வீரர்களாக நரகம் பயத்துடன் எட்டிப் பார்க்கிறது.... இவர்கள் பிசாசை அலற வைப்பவர்கள்! அவனால் கட்டுண்டவர்களை விடுதலை யாக்குபவர்கள்! நரகத்தின் ஜனத்தொகையை குறைத்தவர்கள்! இவர்களின் துணிகர ஜெப போராட்டத்தினால், இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு வேறுபிரிந்து எழுந்த மாந்தர்களின் அணி வகுப்பை தலைதூக்கிப் பாருங்கள்! அந்த விந்தை, இன்றும்.... குளிர்ந்து போன இக்கால சபைகளில் மீண்டும் மின்னி பிரகாசிப்பதாக! ஆமென்.*

*– லியோனார்டு ரேவன்ஹில்*

---

## 'அழைக்கப்பட்டவர்கள்' ஊழியத்தை மட்டுப்படுத்துவது தகுமா?

***வா****ழ்க்கையின் முன்னேற்றத்தை 'பக்தி மார்க்கம்' என்று நினைத்துக்கொள்ளக் கூடாது. அவபக்தர்களான அநேகர், மேலான பதவிகளிலிருந்து செல்வமாய் வாழுகிறதைக் காண்கிறோமே! மிஷனெரிமார் ஊழியம் இந்தப்புறம்பான சீர்திருத்தங்களோடு முடிந்துபோவதில்லை. நம் இரட்சகர், இந்தப் புறம்பான அந்தஸ்தையும் நாகரீகத்தையும் கொடுக்கும்படி தமது ஜீவனை விட்டவரல்ல! ஓர் சமயம் ஒரு பிராமண உத்தியோகஸ்தரிடம் கிறிஸ்துவைப் பற்றிப் பேசினபோது அவர்: "எங்களுக்கேன் உபதேசிக்கிறீர்கள்? பகவான் செயலால் எங்களுக்கு ஒரு குறைவு மில்லை! அந்தத் தாழ்ந்த வகுப்பாரை வேதத்தில் சேர்த்து, அவர்களை முன்னுக்குக் கொண்டு வாருங்கள்" என்றார். அவர் கண்ட கிறிஸ்து மார்க்கம் அவ்வளவுதான்! அவரைப்போலவே அநேகர் நினைக்கிறார்கள்.*

வேதத்தில் சேர்ந்தால் படிப்பு, உத்தியோகம், பிழைப்பு, கலியாணம் நடக்கும் என்று பொதுவாய் பேசிக்கொள்கிறார்கள். அவைகளல்ல, அவைகளைப் பார்க்கிலும் மேலான ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிறோம் என்று காட்ட வேண்டியது நமது கடமை!

அப்படிப்பட்ட ரட்சிப்பின் ஜீவிய மாறுதல் நம்மில் உண்டா? இல்லையென்றால் இந்தக் கல்வியும், அந்தஸ்தும், சம்பாத்தியமும்.... மேட்டிமைக்கும் சகலவித வேதனை சங்கடங்களுக்கும் உங்களை இழுத்துச் செல்வதையே காண்பீர்கள்! ஆம், **ஆத்தும வளர்ச்சியில் அக்கறையில்லாத சபைகளில்** குதர்க்கங்களும் பிரிவினைகளும் உண்டாகிறதென்பதை அறிவோம். அந்தஸ்தில் உயர்ந்த இவர்கள், ஆவியில் உயர்ந்தாரில்லை. ஆகையால் மிஷனெரிமார் எவ்வளவுக்குப் புறம்பான நன்மைகளைச் செய்கிறார்களோ, அவ்வளவை விட இன்னும் அதிகமாய் தங்கள் விசாரணைக்குட்பட்டவர்களின் ஆத்ம ரட்சிப்புக்காக உழைக்கவும் வேண்டும். பற்பல வேலைகளை மேல்விசாரணை செய்வதும், நீங்கள் ஏற்படுத்திய வேலை வாய்ப்பு நிறுவனங்களுக்கு சம்பளம் போடுவதுமே உங்கள் வேலை என்று நினைக்கக் கூடாது. தேவ பக்தியுள்ள ஒரு மிஷனெரி: "வேலைகளை மேல் பார்க்கவும் சம்பளம் போடவுமா நான் சீமையிலிருந்து இந்தியாவுக்கு வந்தேன்? மற்றவர்களை கிறிஸ்துவிடம் நடத்து கிறதற்கல்லவா நான் என்னை ஆண்டவருக்குப் பிரதிஷ்டை செய்து வந்தேன்" என்று விசனத்தோடே கூறினார். நமதாண்டவர், ஊழியர்களை ஏற்படுத்தி மேல் விசாரணை செய்யும்படி வந்தவரல்ல. **அவர்தாமே இடைவிடாது உழைக்கும் ஊழியனாக** வந்தார். "நான் ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியஞ்செய்யவே வந்தேன்" என்றார்.

தேவ ஊழியத்தை நிறைவேற்றும்படி அழைக்கப்பட்டு, ஊழியர்களாய் வந்தவர்களில் சிலர், உலக விவகாரங்களில் அதிகச் சிரத்தையுள்ளவர்களாயிருக்கிறார்கள். கட்சிகளை வைத்துக்கொண்டு விசாரணை செய்வதிலும், நியாயஸ்தலம் சென்று வழக்காடுவதிலும், வீடுகள் நிலங்கள் வாங்குவது விற்பதிலும் அதிக உற்சாகமுள்ளவர்கள்! ஜனங்கள் தங்கள் வழக்குகள் பிராதுகளை எடுத்துக்கொண்டு இவர்களிடம் வந்தவண்ணமாயிருப்பார்கள்.

**கர்த்தருடைய ஊழியத்தைப் பார்க்கிலும் இப்படிப்பட்ட காரியங்களில் இவர்களுக்குப் பிரீதி அதிகம்! ஆவிக்குரிய ரட்சிப்பின் வேலையில் இவர்கள் படுமோசம்! அழைக்கப்பட்டு வஞ்சனைக்குள்ளான இவர்களை விட்டுவிடலாம்.... ஆனால், மாம்சத்துக்குரியவர்கள் ஆவிக்குரிய வேலையை எப்படிச் செய்ய முடியும்?**

இவர்களுக்குள்ள அறிவும் திறமையும் ஒருபுறம் இருக்கட்டும், ஆனால் இவர்கள் தங்களை ஆண்டவருக்குப் பூரணமாய் ஒப்புக்கொடுத்து, அழைக்கப்பட்டு தங்கள் வரங்களை சபையாரின் ரட்சிப்புக்கென்று உபயோகிப்பார்களானால் எவ்வளவோ பாக்கியம்! அப்படியில்லை யென்றால், அழைக்கப்பட்டோம் என ஊழியத்திற்கு வந்து

மண்ணுக்குரிய விசாரணை கொண்டவர்கள், இந்த ஊழியத்தை விட்டு விலகி, தங்கள் அறிவுக்கும் திறமைக்கும் ஏற்ற வேறு வேலைகளைத் தெரிந்துகொண்டு, தங்கள் பிழைப்பை நடத்துவது உத்தமம்! அப்படிச்செய்யாமல் கிறிஸ்தற்ற ஊழியர்களாகிய இவர்கள், ஆத்தும பணியில் அக்கறையற்று, வழக்கம்போல் வேலை செய்து கொண்டு போவார்களானால், சபைகள் பாழாய் போகும்!

**உத்தம ஊழியர்கள் இருந்து வேலை செய்ய வேண்டிய சபைகளில், கிறிஸ்தற்ற ஊழியர்கள் இருப்பதைப்போல் மோசமான காரியம் வேறில்லை!**

இவர்களைப்போலவே சபையாரும் உலக மக்களாகிற கொடுமையை என்னவென்று சொல்வது!

– பரமானந்தம் ஐயர்

---

## எந்நிலையிலும் 'ஆவியில் நிறைந்தவனே' குதூகலமாயிருப்பான்!

**நீ**ங்கள் மெய்யாகவே ஆவியினால் நிறைந்திருப்பதை எப்படி அறிந்துக்கொள்ளலாம்? உங்கள் ஆவியின் நிறைவை சோதிப்பதற்கே **வாழ்வின் கடினங்கள்** உங்களுக்கு சம்பவிக்கிறது என்பதை அறிவீர்களாக!

இங்கே பாருங்கள், மூன்று வாலிபர்கள்.... சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ! இவர்கள் முன் இருந்தது என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?.... கொடிய "எரிந்து கொண்டிருக்கும் அக்கினி சூளை" அந்த அக்கினிச் சூளை, வேறு யாருக்கும் அல்ல 'இவர்களைத் தூக்கி போடுவதற்கே' எரிந்து கொண்டிருக்கும் அக்கினி சூளை! ஆகிலும் இந்த எபிரேய வாலிபர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? அது **துதியைவிட இன்னும் வலிமையான அறிக்கை** என்றே கூற வேண்டும். இந்த மூன்று இளைஞர்கள், அந்த எரிதழலை மூட்டிய ராஜாவைப் பார்த்து "நேபுகாத்நேச்சாரே, இந்த காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை. நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்" (தானியேல்.3:16,17). நன்றாய் கவனியுங்கள், இந்த காரிருள் நேரத்தில், **ஒருவன் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்காவிடில்** இத்தனை வலிமையான துதியின் அறிக்கையை கூறவே இயலாது!

**உங்கள் வீட்டின் மாடியில் இருக்கும் உங்கள் மகள் "அம்மா! அம்மா! அண்ணன் ட்ரெசிங் கண்ணாடியை உடைத்து விட்டான்! என் காலில் இரத்தம் கொட்டுகிறது" என கூவி அழும்போது உங்கள் முழு வீடும் ஆத்திரமும், அவசரமும் அடையும் அல்லவா? இந்த சூழ்நிலையிலும் நீங்கள் ஆவியின் வல்லமையினால் நிறைந்திருந்தால், அமைதியாய் இருக்கவும், தொடர்ந்து ஸ்தோத்திரம் செய்யவும் முடியும்!**

*மற்ற ஒரு உதாரணத்தைப் பாருங்கள். பவுல் கூறினார்* "**ஒன்றும் இல்லாதவர்கள்** *என்னப்பட்டாலும் சகலத்தையும் உடையவர் களாகவே எங்களை விளங்கப் பண்ணுகிறோம்" (2கொரி.6:10) என கம்பீரமாய் கூறினார். யாரால் இப்படி கூற முடியும்? ஒருவனுக்கு பணம் இருந்தால் மாத்திரமே வங்கியில் சென்று பணம் எடுத்து வர அமைதியாய் இருப்பான்! ஆனால்* **'ஒன்றுமில்லாமலே' சகலமும் இருப்பதை போல் அமைதி காணும்** *ஓர் நிலை, ஆசீர்வதிக்கப்பட்ட நிலையாகும். ஒருவகையில் இதுபோன்ற நிலை "மதுபான வெறி கொண்டவர்களுக்கு"மாத்திரமே சம்பவித்திட முடியும். எது இல்லாவிட்டாலும், மதுபான வெறிகொண்டவன் பாடுவான், தைரியமாய் நிற்பான், கலகலவென்று பேசுவான்! இது எப்படி சம்பவித்தது? அவன் 'வேறு ஒரு ஆவியில்' இப்போது இருக்கிறான். இதுபோலவே ஆவிக்குரிய மனுஷன் எந்த சூழ்நிலையிலும்.... "பரிசுத்த ஆவியை சார்ந்து கொண்டு" துதி ஏறெடுக்க முடியும்!*

*துன்மார்க்கத்திற்கென குடிப்பவன் முதலில் ஒரு கிளாஸ் குடிக்கிறான்.... அது அவனுக்குப் போதாது....* **தொடர்ந்து பத்து கிளாஸ் குடித்து மதுபான வெறி நிலை அடைகிறான்!** *இந்த நிலையில்தான், அவன் தடுமாறும் பாடல் பாடி மகிழ்ச்சியாயிருக்கிறான். அதுபோலவே, பரிசுத்தஆவியைப் பருகி... உங்கள் இருதயம் நிறையும்வரை பருகுங்கள்!*

இவ்வாறு நிரப்பப்பட்டவன்தான் 'அந்த வெறி கொண்டு' எப்போதும் சங்கீதம் பாடி .... எல்லாவற்றிற்காகவும் தேவனை ஸ்தோத்தரிப்பான்!

*மிகக் கொடிய சூழ்நிலை ஏற்பட்டதாக எண்ணி நீங்கள் துவண்டு போனீர்களோ? ஸ்தோத்திரம் செலுத்த விரும்பியும், உங்கள் உள்ளத்தில் இளைப்பாறுதல் இல்லையோ? இப்போது உங்களுக்குத் தேவையானது ஒன்றே ஒன்றுதான். அந்த மனுஷனைப் போல.... தூய ஆவியைப் பருகி பருகி இருதயம் நிரம்பும் வரை பருகுங்கள்! எதுவரை இவ்வாறு நிறைய வேண்டும்? உங்கள் இருதயம் ஆவியின் வலிமை கொண்டதாய், அந்த இருதயத்தை கர்த்தரே முழுவதும் ஆட்கொண்டதாய், கர்த்தருடைய மகிழ்ச்சியினால் பொங்கும்வரை ஆவியை பருகுங்கள்! இதுபோல கர்த்தருடைய ஆவியினால் வெறிகொள்ள உங்களால் முடியுமா? ஒரு துன்மார்க்கன் தன் குடியில் வெறிகொள்ள முடியுமென்றால், உங்களாலும் முடியும் என்றே வேதம் திருஷ்டாந்தப்படுத்துகிறது! ஆகவே, கண்டிப்பாய் முடியும்! எளிய விசுவாசம் கொண்டவனுக்கு முடியும்! ஆவியை குடித்து பருகிட* "**தன்னை முழுவதும் ஒப்புக்கொடுத்தவனுக்கு**" *முடியும்! இதற்கு, இந்த அற்புத செயலுக்கு,* **உங்கள் விசுவாசம்** *உங்களுக்கு துணை*

நிற்கக்கடவது! குடித்து.... வெறித்து ஆனந்த களிப்படைந்தவன் மாத்திரமே 'எல்லாவற்றிற்காகவும்' ஸ்தோத்தரிப்பான்! அதுமட்டும் அல்ல, அவன் எல்லோரையும் பார்த்து "நீங்களும் எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் தேவனை ஸ்தோத்தரியுங்கள்" என மிகுந்த ஆர்ப்பரிப்புடன் கூறுவான்!!

இவ்வித செழித்த நடைமுறை வாழ்விற்கு, எவ்வளவேனும் பொய்யுரையாத தேவனின் கட்டளைக்கு செவி சாய்ப்போமாக. அது என்னவெனில் "நீங்கள் எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (1தெச.5:18).

மீண்டும், முடிவாய் கேளுங்கள்: நீங்கள் மதுபானத்தினால் வெறி கொள்ள வேண்டாம்.... ஆனால், தயவாய் "ஆவியினால் நிரம்பி வழியுங்கள்" அப்போது உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணுவது மாத்திரம் அல்லாமல், எல்லாவற்றிற்காகவும் பிதாவை ஸ்தோத்தரித்திட முடியும்! நிச்சயமாய் முடியும்!! (எபே.5:18,19,20) ஆமென்.

– விக்கிள்ஸ்வொர்த்

---

## மரணபரியந்தம் 'எல்லையில்லாத' கீழ்படிதல்!

**சொ**ந்த மகனாகிய ஈசாக்கையே பலிசெலுத்தும்படி அழைத்த அந்த கடினமான அழைப்பைப் போன்று, உங்களை தேவன் எப்போதாவது அழைத்திருக்கிறாரா? அல்லது எல்லா நேரங்களிலும் ஆறுதல் செய்யும் வாக்குதத்தங்கள் மாத்திரமே உங்கள் செவியில் கேட்டதா? ஆஸ்வால்ட் சேம்பர்ஸ் என்ற பக்தன் கூறும்போது, "கடினமான செயலுக்கு அழைக்கும் தேவனுடைய குரலை" நாம் கேட்டதே இல்லையென்றால், இதுவரை தேவன் நம்மோடு பேசியதாக எண்ணிக்கொண்டதும் சந்தேகத்திற்குரியதேயாகும்!! என அவர் கூறினார்.

தன் வயது முதிர்ந்த பக்தனிடம் தேவன் இவ்வாறு பேசிய அந்த ராத்திரியை அவர் எவ்வாறு கழித்தார் என வேதம் கூறவில்லை. இருப்பினும், அந்த ராத்திரியில் அவர் தூங்கியிருக்கமாட்டார் என்றே நாம் யூகிக்க முடிகிறது! அந்த ராத்திரியில் அவர் அடிக்கடி எழுந்து சென்று, தூங்கிக்கொண்டிருந்த தன் செல்ல மகனை மீண்டும் மீண்டுமாய் பரிதாபத்தோடு பார்த்து வந்தார். பொழுது விடிந்ததும், தன் மகனுக்கு ஆபிரகாம் செய்யப்போகிற செயலை எண்ணி எண்ணி கண்ணீர் வடித்திருப்பார்!

அந்த தள்ளாத வயதில் தன் மகனை பலிசெலுத்த வேண்டியிருப்பது

ஆபிரகாமின் உள்ளத்திற்கு எத்தனை பாரமாய் இருந்திருக்க வேண்டும்! ஆகிலும், என்ன விலைக்கிரயம் செலுத்தி யாகிலும், தேவனுக்குக் கீழ்ப்படிந்திட அவன் முழுமனதாய் இருந்தார்!!

சுமார் 50 - வருடங்களுக்கு முன்பாக, ஊர் தேசத்திலிருந்து தன்னை தேவன் அழைத்தபோது, கலப்பையில் வைத்த தன் கையை, இப்போது எடுத்துவிட்டுத் திரும்பிப்பார்க்க துளியும் அவர் விரும்பவில்லை! அதற்குப் பதிலாக, ஆபிரகாம் கூறியது என்ன தெரியுமா?

"தேவா! நான் திரும்பிப் பார்க்காதிருக்க கிருபைதாரும்!
நான் பிடித்த கலப்பையின் கைப்பிடி கண்ணீரால் நனைந்துவிட்டது
கலப்பையின் கொழுவும் உழுது தேய்ந்துபோனது.... ஆகிலும்
என் தேவனே! திரும்பிப் பார்ப்பது மட்டும் எனக்கு வேண்டாம்!
தயவுகூர்ந்து கிருபை பொழிந்து என்னை ஆண்டுகொள்ளும்!!"

என்றே அவர் வேண்டி நின்றார்.

ஆம், ஆபிரகாமிடத்தில் எந்த குறைசொல்லும் எந்த கேள்வியும் எழவில்லை. ஆண்டவரைப் பார்த்து "தேவனே! உமக்கு நான் எவ்வளவோ உண்மையுள்ளவனாய் இருந்திருக்கிறேன்! இந்தக் கடின செயலையும் நான் செய்திடக் கூறுவது சரிதானா?" எனக்கேள்வி கேட்க வில்லை. அதேபோல, "தேவனே! என்னைச் சூழ்ந்த எந்த மானிதனைக் காட்டிலும் மிக அதிகமான தியாகங்களையே நான் செய்திருக்கிறேன். இன்னும் அதிகமாய் என் மகனை தியாகம் செய்யும்படி என்னை அழைப்பது ஏனைய்யா?" என்றும் அவர் கேள்வி கேட்டிடவில்லை!

அநேகம் விசுவாசிகள் தங்களைச் சூழ்ந்துள்ள மற்றவர்கள் செய்த செய்கையோடுதான் தங்கள் தியாகங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். ஆகவே, மற்றவர்கள் செய்ததைக் காட்டிலும் அதிகமான தியாகத்திற்குத் தேவன் அவர்களை அழைத்த போதோ.... தயங்கி, தேங்கி நிற்கிறார்கள்!!

ஆனால், ஆபிரகாமோ அப்படியில்லை. அவருடைய கீழ்படிதலுக்கு ஓர் எல்லையே இல்லை! தேவனுக்காக தியாகம் செய்திடும் 'மனவிருப்பத்திற்கு' ஓர் முடிவே இல்லை!!

– *Selected*

---

## அபிஷேகிக்கப்பட்ட ஊழியர்களை, விரோதம் பேசுவது கொடிது!

**பெ**ருமையில் குடிகொண்டிருக்கும் நாம், யாரோ சிலரால் தீது பேசப்படும்போது, உடனடியாக நம்மை பாதுகாத்திட துடித்து நிற்கிறோம்! ஆனால், மோசே தீது பேசப்பட்டபோது, சாந்தமுள்ள வனாய் நின்று , பதிலுக்கு தாக்குதல் செய்யவில்லை! ஆனால் மிரியாம், மோசேக்கு விரோதமாய் பேசியபோது ".... சடுதியாய் கர்த்தர்

*பேசினார்....'' (எண்.12:4) என வாசிக்கிறோம்.*

**இந்த மோசேயோ தன்னை பாதுகாத்திட சடுதியாய் பேசவில்லை! ஏனென்றால், அவன் இந்த பூமியிலேயே மிகுந்த சாந்தகுணமுள்ளவனும்.... முகமுகமாய் கர்த்தரோடு பேசியவனுமாய் இருந்தான் (எண்.12:3,8).**

*அன்றைய பழைய உடன்படிக்கையில், கர்த்தரால் அபிஷேகிக்கப்பட்ட தாழ்மையான தேவ மனிதனை மிரியாம் குறை கூறியபடியால்.... வெறும் ஜுரம் அல்லது ஜலதோஷம் அவளை பிடித்துக் கொள்ளவில்லை! மாறாக, கொடிய குஷ்டரோகம் அவளைப் பிடித்துக் கொண்டது! இளம் வாலிபர்களே, எச்சரிக்கை கொள்ளுங்கள்!! இன்று நாம் புதிய உடன்படிக்கையில் கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிற படியால், நம் மத்தியில் வாழும் அபிஷேகிக்கப்பட்ட தீர்க்கதரிசிகளை தீது பேசிவிட்டு தப்பித்துக் கொள்ளலாம் என ஒருபோதும் எண்ணாதிருங்கள்! இன்று புதிய உடன்படிக்கையின் தரம், பழைய உடன்படிக்கையின் தரத்தைக் காட்டிலும் மேலோங்கியது என்பதை அறியுங்கள் (மத்.5:21-28). இன்று நமக்கு சரீரத்தில் குஷ்டரோகம் வராது இருக்கலாம். ஆனால், அதை விட கொடியதாய் 'ஆவிக்குரிய குஷ்டரோகம்' நம்மைத் தொத்திக் கொள்ளும் என்பதை அறியுங்கள். சரீர குஷ்டரோகம், நம் சரீரத்தில் ஏற்படும் வலியின் உணர்வுகளை அற்றுப்போகச் செய்யும். ஆகையால், சரீரத்தில் ஒரு முள் குத்தினாலோ, கொசுவோ எலியோ கடித்தாலோ அல்லது சிங்கமே கடித்து தின்றாலும் 'உணர்வில்லாதவர்களாய்' தூங்கிக் கொண்டிருக்க முடியும். இதைவிட மோசமானதுதான் ஆவிக்குரிய குஷ்டரோகம்! அது, நம் மனசாட்சி பாவ உணர்ச்சிகளை இழந்து விடும். தாவீது, சவுலின் சால்வையின் தொங்கலை "மெல்ல... இரகசியமாய்" அறுத்தபோது... அவன் மனது அவனை அடித்துவிட்டது! (1சாமு.24:4). 'சால்வை' சரீரத்தின் நிர்வாணத்தை அல்லது அவலட்சணத்தை மூட உதவும் போர்வை ஆகும்.*

**இன்று நாமும் ஒரு தேவ மனிதனின் கௌரவத்தை "இரகசியமாய்" ஒரு சிறு அளவு அறுத்தாலும்... தாவீதின் மனது அவனை அடித்ததுபோல், மனசாட்சி நம்மையும் அடிப்பது நல்லது!**

*இல்லையென்றால்..... 'ஆவிக்குரிய குஷ்டரோகிகள்' பின்னாலிருந்து புறங்கூறலாம்! தீட்டுப்படுத்தும் அருவருப்பு காட்சிகளைக் கண்டு கொண்டிருக்கலாம்! இச்சிக்கலாம்! ஆத்திரமான கோபமடையலாம்! பொய்யுரைக்கலாம்!... ஆனால், இவை யாதொன்றும் அவர்களின் மனசாட்சியில், எந்த ஒரு வலியையும் ஏற்படுத்துவதில்லை. ஆம், சரீர குஷ்டம், அவர்களுக்கு ஏற்படும் வலியை அறிவதில்லை. ஆனால்,*

ஆவிக்குரிய குஷ்டரோகம் கொண்டவர்கள் "**கர்த்தர் தன்னை விட்டு விலகினதைக் கூட அறியாமல் போகும்**" கொடுமை சம்பவித்து விடும் (நியாய.16:20). குறைந்தது, இன்று முதல் "கர்த்தரால் அபிஷேகிக்கப்பட்டவர்களைத் தொடாதிருக்க" நாம் கவனம் கொண்டிருக்கக்கடவோம்.

– ராபர்ட் டேவிட் (பூனே)

---

## உத்தம சபையே, ஜனங்களை 'ஜீவனுக்குள்' நடத்த பாடுபடும்!

**பா**வ சுமையிலிருந்தும், உலக பாரத்திலிருந்தும் விடுதலை பெற விரும்பும் யாவருக்கும் 'ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை' பரம உதவி தேடும் யாவருக்கும் தேவன் தருகிறார் என எபிரெயர்.4:16 நமக்கு மகிழ்ச்சியுடன் கூறுகிறது. இந்த சகாயத்தையே மோட்ச பயணம் தொடர்ந்த கிறிஸ்தியான் அனுபவித்தான்.

சேற்றிலிருந்து மீண்டு வந்த கிறிஸ்தியான், மிகுந்த மகிழ்ச்சியுடன் நாகரீக வஸ்திரத்தோடு மிடுக்காக அமர்ந்திருந்த **'உலக ஞானியை'** சந்தித்தான். இவன் ஓர் சிறந்த மார்க்கவாதியாய், தன் சொந்த அறிவின்படி இந்த உலகத்திலிருந்து இரட்சிக்கப்படுகிற வழியை நாடியவன். இவன் செல்வந்தனாயும், துன்பத்தை சகிக்க மறுத்தவனாயும் இருந்தான். அவன் கிறிஸ்தியானைப் பார்த்து "நீ ஒரு நல்ல வாழ்க்கையை வாழ விரும்பினால் **'ஒழுக்க தேசம்'** என்ற ஊருக்கு போ!" அங்கு **'வேத பிரமாணி'** என்ற மனிதனை சந்திப்பாய். அவன் உலக அறிவு மாத்திரமல்லாமல், வேதம் முழுவதும் கற்றறிந்த பண்டிதன்! அவன் உனக்கு தேவனுடைய பிரமாணங்களை எவ்வாறு கைக்கொள்வது, அதன்மூலம் எப்படி இரட்சிக்கப்படுவது என்பதையெல்லாம் விளக்கிக் காண்பிப்பான். ஆனால் உண்மையில், நியாயப்பிரமாணம் பல வழிகள் கொண்ட குகைக்குள் நுழைந்தது போலாகும். அதில் நுழைந்த ஒருவன், வெளியே வருவதற்குரிய வாசலை கண்டுபிடிக்காமல் சிக்கலில் அகப்பட்டுக் கொள்வான்! என்பதே நியாயப்பிரமாணத்தின் வழியாய் இருக்கிறது.

நியாயப்பிரமாணம் கைக்கொண்டு வாழ்பவன், இரட்சிக்கப்படலாம் அல்லது நீதிமானாக்கப்படலாம் என்பதெல்லாம் சுயமுயற்சிகளே ஆகும். அவ்வாறு **சுய முயற்சிகளால்** பெற்றுக் கொள்ளும் எந்த நீதியும் தேவனுடைய பார்வையில் 'அருவருப்பான கந்தைகள்' என வேதம் தெளிவாய் கூறுகிறது. இவைகளையெல்லாம் கேட்ட கிறிஸ்தியான், நியாயப்பிரமாணம் தனக்கு உதவி செய்யக் கூடுமோ? என சிந்தித்து, நியாயப்பிரமாணத்தின் வழியான சீனாய்

மலைக்கு ஏறினான்! அங்கு கொளுந்து விட்டு எரிந்த அக்கினியைக் கண்ட கிறிஸ்தியான், சீனாய் மலையின் வழி தன்னை இரட்சிக்க இயலாது என்பதை அறிந்து தெளிவடைந்தான். இதுபோன்ற தெளிவு நம் கிறிஸ்தவ ஜீவியத்தின் அஸ்திபாரமாய் இருக்கிறது.

**அதாவது, நம் சொந்த கிரியைகளின் மூலமாக இரட்சிக்கப்பட முடியாது என்பதையும் தேவனுடைய கிருபையினால் மாத்திரமே இரட்சிக்கப்பட முடியும் என்பதும் நம் கிறிஸ்தவ ஜீவியத்தின் முதல் அஸ்திபாரமாய் இருக்கிறது.**

இந்த அஸ்திபாரத்திற்கு மேல்தான் நம் கிறிஸ்தவ மாளிகை கட்டப்பட முடியும். அது, பரிசுத்தாவியின் உதவி கொண்டு, நம் சுயத்தை வெறுத்து, நாள்தோறும் சிலுவை எடுத்து ஆண்டவரைப் பின்பற்றும் ஜீவியமாகும்!!

இந்த நேரத்தில், கிறிஸ்தியான் ஆரம்பத்தில் சந்தித்த சுவிசேஷகனை மீண்டுமாய் பார்த்தான். சுவிசேஷகன் "நான் உன்னை அந்த குறுகிய திட்டி வாசலை நோக்கிப் போகும்படியே கூறினேன்! நீ ஏன் வழியில் சந்தித்த மற்றவர்களின் ஆலோசனையை கேட்டாய்?" என கடிந்து கொண்டார். "பிரமாணத்தை கைக்கொண்டு நல்லவனாய் மாறலாம் என எண்ணி உன் நேரத்தை வீணடித்துவிட்டாய்.... சீக்கிரமாய் அந்த திட்டி வாசலுக்குச் செல், காலம் கடந்து இருட்டபோகிறது" என கடிந்து கொண்டான். நான் உனக்கு மீண்டும் சொல்லுகிறேன். நியாயப்பிரமாணத்தின் நல்ல கிரியைகள் மூலம் நாம் இரட்சிக்கப்பட முடியாது! ஆனால் **விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்!** என சுவிசேஷம் போதித்தான். தன்னைக் கடிந்துகொண்ட சுவிசேஷகனுக்கு கிறிஸ்தியான் நன்றி கூறினான். நாமும், கடிந்து புத்தி சொல்லும் ஊழியர்களுக்கு நன்றியுள்ளவர்களாய் இருக்க கவனம் கொள்ள வேண்டும். இப்போது கிறிஸ்தியான், மீண்டும் தன் பயணத்தை திட்டி வாசல் நோக்கி புறப்பட்டான். அந்த குறுகலான வாசல் வழியாய் கவனத்துடன் சென்ற கிறிஸ்தியான், தன்னை வீழ்த்த பிசாசானவன் எய்த அம்பைக் கண்டு வேகமாய் கதவை தட்டினான்! கதவை திறந்த வாசல் காவலாளி, கிறிஸ்தியானை உள்ளே இழுத்துக் கொண்டான்.

இன்றும், ஜனங்களை ஜீவனுக்குள் நடத்தும் இடுக்கமான வாசலையும், நெருக்கமான வழியையும் காண முடியாதபடி பிசாசானவன் ஜனங்களைத் தடுக்கிறான். ஆனால், மெய்யான தேவனுடைய சபை, தன் அர்ப்பண ஊழியம் மூலமாய் 'ஜீவன் தரும்' இந்த இடுக்கமான வாசலுக்கும் நெருக்கமான வழிக்கும் நேராய் ஜனங்களை நடத்துவதற்கு உத்தமமாய் பாடுபடும்!

– மோட்ச பயணம் (சகரியா பூணன் விளக்க உரை)



# பெலிசிடஸ் – 7 மகன்கள்!

## கிறிஸ்துவின் தியாக சுடர்கள்

(கி.பி.101 – கி.பி.162)

ரோம் நகரில் கி.பி.101–162 காலத்தில் "பெலிசிடஸ், அந்த அம்மையாரின் ஏழு மகன்களும்" ரோமபுரியில் தங்கள் விசுவாசத்திற்காக கொடூரமாக பலியானார்கள். தன் கணவனை இழந்த பெலிசிடஸ், தன் ஏழு மகன்களையும் கிறிஸ்தவ விசுவாசத்தின் பக்தி வாழ்க்கையில் கவனமாய் வளர்த்தார்கள். இவர்களின் பக்தியான ஜீவியத்தை கண்ட அநேக விக்கிரக ஆராதனை குடும்பங்கள் தங்கள் தேவதைகளை விட்டு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தை தழுவிக் கொண்டார்கள். இதனால் ஆத்திரமடைந்த பூசாரிகள் தங்கள் அரசர் அன்டோனிநஸிடம் புகார் செய்தார்கள். ஆத்திரமடைந்த அன்டோனிநஸ் ரோமபேரரசர் பூப்லியஸிடம் பெலிசிடஸ் விதவையையும் அவளது ஏழு மகன்களையும் கைதியாய் நிறுத்திவிட்டான். பெலிசிடஸின் துணிவான விசுவாசத்தைக் கண்டு கோபமடைந்த பூப்லியஸ் "நீ ரோம தேவதைகளுக்கு பலி செலுத்திவிட்டால் உன்னையும் உன் ஏழு மகன்களையும் விடுவித்து விடுவேன் என கூறினான். அதற்கு பெலிசிடஸ் "பேரரசே, உங்களது அச்சுறுத்தலோ அல்லது என்னை தப்புவிக்க கூறும் அன்பான பேச்சுக்களோ ஆகிய யாதொன்றும் என்னை பயமுறுத்த முடியாது. ஏனெனில் எனக்குள் வாசம் செய்யும் தேவ ஆவியானவர் நாங்கள் அந்தகார பிசாசினால் மேற்கொள்ளப்பட அனுமதிக்கமாட்டார்! எனக்கு சம்பவிக்கும் எந்த கொடூரத்திலிருந்தும் நான் ஜெயித்து வர உதவி செய்வார்" என கூறினார். "புத்தியீனமான பெண்ணே, உன் பிள்ளைகள் வாழ்வதற்கு கூட அனுமதியாமல், அவர்களும் கொடிய மரணத்தை ஏற்றுக்கொள்ள நீ விரும்புகிறாயா?" என கேட்டான். "ஆ என் பிள்ளைகள்! கிறிஸ்துவுக்கு உண்மையாய் இருந்தால் கிறிஸ்துவுடன் நித்தியத்தில் என்னோடு இருப்பார்கள்... ஆனால் இந்த விக்கிரகங்களுக்கு இவர்கள் பலி செலுத்தினால் நித்திய மரணத்தை அல்லவா தழுவுவார்கள்!" எனக்கூற, கோபத்துடன் மார்ஸ் திடலுக்கு இழுத்துவரப்பட்டார்கள். ஆத்திரமுடன் தண்டனைக்கு அழைப்பு விடுத்தான். முதலாவது மூத்த மகன் ஜெனுவாரிஸ், பூபிலியசுக்கு முன்பாக ஒத்தவேஷம் தரிக்க மறுத்ததோடு "நானோ என் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கே உண்மையுள்ளவனாக இருப்பேன்" என கூறியதும் அவன் வஸ்திரம் உரிக்கப்பட்டு, சாகும் வரை வாரால் அடிக்கப்பட்டு இழுத்து செல்லப்பட்டான். இரண்டாவது மகன் பெலிக்ஸ், மூன்றாவது மகன் பிலிப்ஸ், நான்காவது மகன் சில்வான்ஸ், ஐந்தாவது மகன் அலெக்ஸாண்டர், ஆறாவது மகன் விட்டலிஸ், கடைசியாக ஏழாவது மகன் மார்சியலிஸ் ஆகிய யாவரும் தங்கள் விசுவாசத்தை மறுதலிக்க மறுத்தப்படியால் ஒருவர்பின் ஒருவராக அவர்களின் தாய் பெலிசிடஸ் கண்களுக்கு முன்பாகவே தலை சீவப்பட்டார்கள். கடைசியாக பெலிசிடஸிடத்தில் கொலைகாரர் வந்த போது தன் கண்களுக்கு முன்பாகவே கொலை செய்யப்பட்ட பிள்ளைகளின் பாசத்தினால் உள்ளம் வேதனையினால் நிறைந்திருந்தபோதும், அவர்களின் விசுவாச தீரத்தை கண்டு களிகூர்ந்து கண்ணீருடன் நின்று கொண்டிருந்தாள். கிறிஸ்துவை மறுதலிக்க உறுதிபட மறுத்து "விசுவாச ஜெயத்தை" விண்ணில் பதித்த அதே வேளையில் பெலிசிடஸையும் சிரச்சேதம் செய்தார்கள்!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## மாய இன்பம், கசாப்புக் கடையில் ஆனந்தமாய் கூவும் சேவலுக்கு சமம்!

கோழி கசாப்புக் கடை ஒன்றை நான் கடந்து சென்று கொண்டிருந்தேன். அங்கு வைக்கப்பட்டிருந்த இரும்புக் கூண்டுக்குள் அடைபட்டுக் கிடந்த அநேக கோழிகளை நான் கண்டேன். அந்தக் கூண்டுக்குள் இருந்த சேவல் கோழி ஒன்று ஆனந்தமாக கூவிக்கொண்டே இருந்தது. அதினுடைய ஆனந்த கூவல் எனக்கு அளவற்ற ஆச்சரியத்தைக் கொடுத்தது.

தனது உரிமையாளனான கசாப்புக் கடைக்காரன் தன் கண்களுக்கு முன்னாலேயே தனது சகாக்களான கோழிகளை கொன்று தனது வாடிக்கையாளர்களுக்கு கறியாக்கி கொடுப்பதை அது தனது சொந்தக் கண்களாலேயே காண்கின்றது. ஒரு கோழியை அந்த கசாப்பு கடைக்காரன் அப்படியே தனது கூர் அரிவாளால் தலையை அறுத்துக்கொன்று முடியை பின்னி கறியை வெட்டிக்கொடுக்கிறான். மற்றொரு கோழியை உயிரோடு வைத்தே முடியைப் பின்னிக்கொடுத்து வாடிக்கையாளரின் விருப்பத்தை பூர்த்தி செய்கின்றான். மற்றொரு கோழியை உயிரோடு பிடித்து கொதிக்கும் கொதி நீருக்குள் ஆழ்த்திக் கொன்று அதின் முடியை பின்னி அதை அறுத்துக்கொடுக்கின்றான். இந்த நடபடிகளை எல்லாம் மேற்கண்ட நமது சேவல் தன் சொந்தக் கண்களால் கண்டும், தனக்கும் அப்படிப்பட்டதொரு முடிவு சற்று நேரத்தில் வர காத்திருக்கின்றது என்பதை திட்டமாக அறிந்திருந்த போதிலும், அந்த சேவல் அதை கண்டும் காணாததுபோல தன் மட்டாக இடைவெளி விட்டு விட்டு ஆனந்தமாக கூவிக்கொண்டே இருந்தது.

இவ்வுலகத்தில் வாழும் மனிதன் தனது கண்களுக்கு முன்பாக பற்பலவிதமான கோர மரணங்களால் தனக்கு அன்பானவர்களும், அருமையானவர்களும் கடந்து செல்லுவதைக் கண்ணாரக் கண்டும், காணாதவனைப்போல, தனது பூவுலக பாவ இன்பங்களை சுவைத்து மகிழுகிறான். பிசாசானவன் தனது ஆத்துமாவை சங்காரம் செய்வதற்காக தீட்டிக்கொண்டிருக்கும் மரண அரிவாளின் ஓசை கேட்டும் கேட்காதது போல், கசாப்புக் கடையில் கொக்கரித்துக் கூவும் மேற்கண்ட சேவல் போல உலக பாவ மாயைகளில் மதி மயங்கி அந்த இன்பக் களிப்பில் தன் தலையை நீட்டிக் கூவிக்கொண்டு மகிழும் வாலிபனே, உன் இந்த பாலி - பாவ காலத்திலேயே, பிசாசின் பிடியிலிருந்து விடுபட்டு, உன்னை நேசிக்கும் இரட்சகரின் இரட்சிப்பை கண்டடைய இன்றே மனந்திரும்பு!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்
Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.